

# யாழ். கரவெட்டி தச்சன்தோப்பு

# சிந்தாமணி விநாயகர் ஆலயம்

# திருவூஞ்சல் பாமாலை 2001

## கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகரை வேண்டி பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் பாடப்பெற்றவை

பாமாலை ஆக்கம் :- கரவை சைவப்புலவர் ஐ. விநாயகமூர்த்தி

தொகுத்து வழங்குபவர்கள் : கரவை நண்பர்கள்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

## சமர்ப்பணம்

### விநாயகப் பெருமான் அன்பர்களே!

**எங்கள் கிராமத்தில் பிறந்து மண்ணுக்கும் மக்களுக்கும் மகிமை சேர்த்து தமிழுக்கும் கலைக்கும் மக்களுக்கும் தொண்டு புரிந்து கடந்த நூற்றாண்டில் எங்களை விட்டுப் பிரிந்த கலை இலக்கிய கருத்தாக்கள்**

**நாடகக் கவிமணி திரு. எம். வி. கிருஷ்ண ஆழ்வார்**
**பண்டிதர் திரு. க. வீரகத்தி**
**ஆசிரியர் திரு. வீ. நடேசு**
**பண்டிதர் திரு. கந்தையா கணபதிப்பிள்ளை**
**சொல்வேந்தன் திரு. செல்லையா பாலசுப்ரமணியம்**
**பல்கலை வித்தகர் திரு. ஐயாண்ணர்**
**தோழர் திரு. பொன். கந்தையா**
**தோழர் திரு. பொன். குமாரசாமி**
**கரவைக் கிழார்**
**கலைத்தென்றல் திரு. செல்லையா அருளானந்தம்**
**சிறப்பு எழுத்தாளர் திரு. நெல்லை க. பேரன்**
**இலங்கையர்கோன் சிரித்திரன் ஆசிரியர் திரு. சி. சிவஞானசுந்தரம்**
**போன்ற மனிதரில் மாணிக்கங்கள் நினைவாக**
**விநாயகர் பாதங்களில் இந் நூலை சமர்ப்பணம் செய்கின்றோம்.**

**நன்றி**


**கரவை நண்பர்கள்**

---

குறிப்பு: கரவை மண்ணில் வாழ்ந்து மறைந்த கலைஞர்களை கௌரவிக்கிற அதே சமயம் வாழுகின்ற கலைஞர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இந் நூலை வெளியீடுகின்றோம்.

E.RAGAVAN
Justice of Peace
(All Island)
R.No: 18-02-NP-W...
Kovitkadavai,Karave...





05 . 07 . 2001

# திருவூஞ்சல் பாமாலை

**கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகரை வேண்டி**

**ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் - பாரிஸில் பாடப்பட்டவை**

**SRI MANICKA VINAYAKAR ALAYAM - PARIS**

72, RUE PHILIPPE DE GIRARD, 75018 - PARIS, FRANCE

M°: Marx Dormoy / La Chapelle - RER / SNCF, EUROSTAR - Gare du Nord - Bus 60, 65, 350

**TEL : 01 40 34 21 89 / 01 42 09 50 45 FAX.: 01 40 34 33 34**

**Website : http://perso.wanadoo.fr/temple.hindou - Email – ganapar@wanadoo.fr**

முதற் பதிப்பு : 16.06.2000
இரண்டாம் பதிப்பு : 05.07.2001

# முகவுரை

கரவை தச்சன்தோப்பு விநாயகர் ஆலய உற்சவம் என்றால் கரவை நகரே சைவ ஒளி வீசும் சந்தன மணம் கமழும் ஊரே விழாக்கோலம் பூணும். இத்தகைய சூழலில் கரவை மக்கள் தமது அன்றாட வேலைகளை ஒதுக்கி வைத்து ஆசாபாசங்களைத் தள்ளி வைத்து ஆசாரசீலர்களாய் பத்து திருநாட்களும் நோன்பிருந்து காலையும் மாலையும் ஆலயத் திருவிழாவிற் கலந்து திருவீதி சுற்றியும் அங்கப் பிரதட்சணம் செய்தும் அடியழித்தும் வழிபாடியற்றி ஆலயத் தொண்டுகள் புரிந்து இறை மனதோடு பெருவிழாக் கொண்டாடும் காட்சியும் அதனால் அடையும் மன நிறைவும் என்றும் மறக்க முடியாதவை. புலம் பெயர்ந்த இன்றைய நிலையிலும் கரவை மக்கள் எங்கு வாழ்ந்தாலும் தச்சந் தெய்வத்தின் திருவிழா நாட்களை புனிதமும் இறைநினைவும் பெருகப் போற்றியே வருகிறார்கள். இந்த அடிப்படையில் பாரிஸ் வாழ் கரவை மக்களும் பாரிஸ் மாணிக்க விநாயகர் ஆலயத்தே வீற்றிருக்கும் விநாயகப் பெருமானை தச்சை விநாயகராகப் பாவித்து தாம் அங்கு இருந்தால் எவ்வாறு இத் திருநாளைக் கொண்டாடுவாரோ அதே போன்று இங்கும் தமது வழிபாட்டை நிறைவேற்றி ஓர் ஆத்ம திருப்தியை பெற்று மகிழும் முயற்சி முன்மாதிரியானது. சரியானது போற்றுதற்குரியது. இம் முயற்சிக்கு பாரிஸ் மக்களும் ஆலய நிர்வாகமும் ஒத்துழைப்பு வழங்குவது மேலும் போற்றுதற்குரியது.

இந்த வழிபாட்டின் ஓர் அம்சமாக எம்பெருமானை திருவூஞ்சலில் எழுந்தருளச் செய்து ஆராதிக்க திருவூஞ்சல் பாமாலை ஒன்றை ஆக்குவதற்கு எண்ணியவர்கள் அந்த வாய்ப்பினை எனக்கு அளிப்பதற்கு சிந்தித்தமையே தச்சந் தெய்வத்தின் கிருபையே என எண்ணுகிறேன்.

மேலும் திருவூஞ்சல் பாமாலையை சிறந்த நூலுருவாக்கி பலரின் பாராட்டையும் வாழ்த்தையும் பெற்றுத் தந்து என்னைக் கௌரவப்படுத்துவது போன்று எம் கிராமத்தில் தமிழுக்கும் கலைக்கும் பெருமை சேர்த்த பெருந்தகைகள் சிலருக்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்து கௌரவம் கொடுத்திருப்பது இனி வரும் எம் சந்ததிகளும் தமிழையும் சைவத்தையும் தம்மிரு கண்களாகக் கொள்ளும் என்ற தென்பைத் தருகிறது.

இறைவனைப் பாடும் ஓர் அரிய வாய்ப்பை எனக்கு நல்கி அதனைச் சிறந்த நூலுருவில் கொண்டு வந்து பெருமை சேர்த்த பாரிஸ் வாழ் கரவை நண்பர்களுக்கும் குறிப்பாக எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து பாடுபட்ட திரு. மா. மனோரஞ்சிதனுக்கும் என்றும் என் நன்றியும் வாழ்த்துக்களும்.

இறைவன் இசைப்பிரியன். தன்னைப்பாடுமாறு நாயன்மார்களுக்கு அடியெடுத்துக் கொடுத்தவன். நாமும் அவனைப் பாடிப் பணிவோம். பயன் பெற்றுய்வோம்.

**- ஐ. விநாயகமூர்த்தி**
*(சுவிஸ்)*

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனை
புந்தியல் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

பொருந்தாத செய்கை பொருந்தக் கண்டேன்
போற்றி யிசைத்து விண்ணோர் புகழக்கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசும் கண்டேன்
பாராய் புனலாகி நிற்க கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியனும் விநாயகனும் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணி தீர்க்குமாறு கண்டேன்
வாய் மூரடிகளை யான் கண்டவாறே.

உ

# திருவூஞ்சல் பதிகம்

## காப்பு

பேரோங்கு புகழ்மணக்கும் பரிசில் மேவி
போற்றுபவர் பிணிபோக்கும் விநாயகர் மேல்
சீரோங்கு கரவைமிளிர் தச்சந் தோப்பு
சிந்தாமணி விநாயகரை ஆரா தித்தே
பாரோங்க பணிந்திறைஞ்சி பலன்பெற் றுய்ய
பாக்களினால் திருவூஞ்சல் அடியேன் ஓத
நீரோங்கு அருவியெனத் தமிழை வேண்டி
நெஞ்சினிலே கணபதிதாள் நினைகு வோமே.

## நூல்

பரிசுநகர் ஈழமிரு தூண்கள் ஆக
படர்ந்தபெரு ஆழ்கடலே விட்டம் ஆக
விரிசுடராம் விநாயகரின் பாதம் போற்றும்
வேற்றுமையில் லாவடியார் நாண்கள் ஆக
தரிசுபடா அடியர்மனம் பலகை யாக
தண்ணளிசேர் பரிசுநகர் மன்றில் மேவி
கரிமுகரே கரவைநகர் தச்சந் தோப்பு
கல்லறையே விநாயகரே ஆடீ ரூஞ்சல். 1

வானமது வரண்டாலும் வற்றாப் பொய்கை
வளமிரங்கும் அத்துளுவே வடபால் ஓங்க
தானமது செழிக்கவென ஞானி யார்பேர்
தாங்குமடம் கேணியிவை தென்பால் மேவ
தேனமுது தேடிவரும் வண்டின் ஓசை
தேங்கிடுநற் பூம்பொழில்கள் இருபால் கொள்ள
ஞானமுதாய் தச்சையினில் கோவில் கொண்ட
ஞானவொளி விநாயகரே ஆடீ ரூஞ்சல் 2

தென்னகத்து விற்பனர்கள் கைவண் ணத்தால்
திருத்தலமே மூலமுதல் முன்றல் மட்டும்
மின்னுமுயர் சிற்பங்கள் மலிந்து தோன்றும்
மிடுக்குறுநற் கருங்கல்லா லமைந்து எங்கும்
தன்னிகரில் லாப்பெருமை கொண்ட தச்சை
தலத்தினிலே தாள்பணிவார் துயர்கள் தீர்த்து
பொன்னகராய் கரவைநகர் மிளிர்ந்து நிற்கப்
பொழிகருணை விநாயகரே ஆடீ ரூஞ்சல் 3

வீதியெலாம் பொன்சொரியும் அலரி கொன்றை
வில்வமொடு ஆல்அரசு அகிலும் வேம்பும்
சாதிபல வாழைபலா கமுகு தென்னை
சரிந்திவைகள் சுற்றிலுமே கவிகை தாங்க
சோதிவடி வாயமைந்த தச்சந் தோப்பில்
சுற்றுமயல் தெய்வமணம் சூழ்ந்து நிற்க
ஏதிலிகள் குறைபோக்கி ஏற்றம் நல்கும்
எம்பரனே விநாயகரே ஆடீ ரூஞ்சல் 4

அகிலமெலாம் பரந்திருக்கும் அடியார் கூட்டம்
ஆனிவரும் விழாத்தினங்கள் பத்தும் எந்தச்
சுகியறியா பசியறியா விரதம் பூண்டு
சுகம்வேண்டி நின்பாதம் தொழுது நிற்பர்
மகிபனெனும் சந்திர சேகரனார் அன்பால்
மாணிக்க விநாயகரா லயத்தே வீற்று
அகிலமுறு அனைவர்க்கும் அருள்பா லிக்கும்
ஆனைமுக விநாயகரே ஆடீ ரூஞ்சல் 5

இந்துமதச் சாத்திரங்கள் அனுட்டா னங்கள்
இறைவணக்க நல்முறைகள் பக்தி மார்க்கம்
சந்ததியாய் நின்றிலங்கு கரவை தன்னில்
சரிந்துவிடா நிலைகாக்க ஆண்டு தோறும்
இந்தியநல் அறிஞர்களை அறிவு சார்ந்த
இன்னுரைகள் இயற்றுதற்கு அருள்பா லித்து
சந்ததிகள் தழைத்தோங்கி விளங்க வைக்கும்
சற்குருவே விநாயகரே ஆடீ ரூஞ்சல் 6

துட்டர்களைச் சங்கரித்து உலகில் மற்றத்
தூயவரைப் பாலிக்கும் பாங்கு போல
எட்டாம்நாள் விழாவினிலே வேட்டை ஆட
எழுந்தருள்வாய் அத்துளூஅம் பாளின் முன்னே
அட்டதிக்குக் கரவையுமே விழாக்கோ லங்கொள்
அழகுவுலா வருநந்நாள் யாசிக் கின்றோம்
விட்டவொரு நல்வழமை விரும்பி யேற்று
வித்தகரே விநாயகரே ஆடீ ரூஞ்சல் 7

நெடிதுயர்ந்த கோபுரமும் தீர்த்தக் கேணி
நேர்த்திபெறு மண்டபமும் பூங்கா போலும்
கடிமணஞ்சேர் மண்டபமும் அழகு மின்னும்
கயிலாய வாகனமும் மஞ்சம் தேரும்
படிபலசேர் சப்பறமும் மிளிரும் தச்சை
பதிதனிலே சித்திரத்தேர் பொலிந்து மின்னப்
படியளந்து பல்குதிருப் பணிகள் காணும்
பரிசுதரே விநாயகரே ஆடீ ரூஞ்சல் 8

அந்தணர்கள் மந்திரங்கள் ஓதி நிற்ப
அங்கமெலாம் புழுதிபட ஆண்கள் சுற்ற
சிந்திடும்கற் பூரவொளி சிரத்தில் தாங்கி
சிற்றிடையார் பவனிவர செங்கை ஏந்தி
பந்தமொடு கொடிகுடையோ டால வட்டம்
பாலர்களின் தேவார ஓசை சேர
விந்தைபல செய்திடவே பவனி கூட்டும்
வித்தகரே விநாயகரே ஆடீ ரூஞ்சல் 9

நாட்டியமும் நாடகமும் நாடி நிற்பாய்
நாதமொடு சேர்கலைகள் நயந்து நிற்பாய்
பாட்டிசைக்கும் பாவாணர் பலரை ஆக்கிப்
பாக்களிலே பரவசங்கொண் டருளி நிற்பாய்
போட்டிபல பண்ணிசையில் புரிந்து நிற்பாய்
புதுமைபல செய்தடியார் குறைகள் தீர்ப்பாய்
ஆட்டுவிப்பாய் அடியவரை அருளே செய்வாய்
அருட்சுடரே விநாயகரே ஆடீ ரூஞ்சல் 10

# வாழ்த்து

செந்தமிழும் சிவநெறியும் சிறந்து வாழி
செழுங்கலைகள் சென்றவிட மெல்லாம் வாழி
பந்தமெலாம் ஒன்றிணைந்து சேர்ந்த நாட்டில்
பாசமொடும் நேசமொடும் படர்ந்து வாழி
சிந்துவண்ணப் பரிசுநகர் சேர்ந்தார் வாழி
சிவநெறியார் சந்திரசே கரனும் வாழி
சந்ததிக்காய் பாடுபடும் தமிழர் கூட்டம்
சகத்தினிலே சுகமனைத்தும் பெற்று வாழி

## லாலி

லாலி - சுப - லாலி - சுப - லாலி - சுப - லாலி
லாலி - சுப - லாலி - சுப - லாலி - சுப - லாலி

கருங்கல்லால் மண்டபங்கள் கரவை நகர் பெருமை பெற
கவின் கதைகள் பல சொல்லும் சிற்பங்கள் ஒளிதந்தும்
அருங்கலையின் எழில் மின்ன அழகுமணி மண்டபத்தை
அமையவருள் பாலித்த க[illegible]றையே லாலி -லாலி

கரவைநக ரைக்கடந்தும் கணீரென்ற மணியோசை
கடலலையாய் மிதந்துவர கலந்துவரும் நின்னருளால்
அரகரசி வாவென்று அவ்விடத்தே கரங்கூப்பும்
அடியவர்தம் அல்லல்தீர் ஆனைமுகா லாலி -லாலி

## எச்சரீக்கை

உற்றாருற வயலார் எனப் பலபேரிருந் தெனினும்
உதரத்தினி லுறுமேயொரு ஊறின்றியே உதிக்க
உனையெண்ணிட உதவோடியே வருவாய்எச் சரீக்கை
பற்றாருனை யெண்ணித்தினம் படரும்ஒரு முயற்சி
பள்ளிபயில் பாலர்முதல் பெரியோர்வரை பலித்து
பலனேபெறப் பாலித்திட வருவாய்எச் சரீக்கை
வற்றாப்பெரும் செல்வமேனும் வழக்காலது அழியும்
வகைதேர்ந்தவர் உனையெண்ணிடில் வழக்கில்பெரு வெற்றி
வாய்ப்பாகிட வகைகாட்டிட வருவாய்எச் சரீக்கை
கற்றாரெனும் இறுமாப்பினைக் களைந்தேயுனை யடைந்தால்
கடிதாகவே பலபேறுகள் கண்டேயுயர் பதவி
காட்டும்பெரு கருணையொடு வருவாய்எச் சரீககை

## பராக்கு

வேதமோதிடும் வேதியர் தவறினும்
விழிபறித்த விநாயகா பராக்கு
தீதுசெய்பவர் தீக்குறை யகற்றிட
தீர்வுகாட்டும் திருவே பராக்கு
நீதிதவறின் நின்னருள் உணர்த்தி
நெறிப்படுத்தும் நிமலா பராக்கு
பாத பங்கயம் பரவிடும் அடியார்
பாவமகற்றும் பரனே பராக்கு

## மங்களம்

பருத்திநகர் அமர்ந்தருளும் சிவனார்க்கு மங்களம்
பற்றையுறை அத்துளுவின் அம்பாட்கு மங்களம்
வருத்துபிணி தீர்தாளங் குளிமுருகா மங்களம்
வல்லிபுரம் மேவுவண்ண மாயவர்க்கு மங்களம்
பெருத்தபுளி மேவுபதி வைரவர்க்கு மங்களம்
பெருமடைகாண் கேணியடி காளிக்கு மங்களம்
கருத்தளவில் பரிசுநகர் பதிதனிலே போற்றும்
கரவைநகர் தச்சையுறை விநாயகர்க்கு மங்களம்.

# தச்சன்தோப்பு

ஒரு நினைவு மீட்டல்

பேராசிரியர்
கார்த்திகேசு சிவத்தம்பி

யாழ்ப்பாணத்துக் கோவில்களைப் பற்றிய சமூகவியலை நோக்குபவர்களுக்கு அங்குள்ள வழிபாட்டிட அமைப்பின் சமூக மட்ட முக்கியத்துவம் துல்லியமாகத் தெரியும்.

வாழ்விட (வீடு) மட்டத்தில்
வீட்டுக் காணிக்குள்
அல்லது அதே தெருவில்
காணப்படும் ஒரு
சிறு கோயில்

இது "சிறு தெய்வம்" அல்ல.
சிறு கோயில்தான்
"சிறு தெய்வம்" "பெருந் தெய்வம்"
எனும் பாகுபாட்டின்
புலமைப் பிரச்சனைகள் உண்டு

பகுதி (இது வட்டாரமாகவும் இருக்கலாம்)
மட்டத்தில்
குளம், பெரிய மரங்கள் போன்ற இடத்திலுள்ள
வட்டாரப் பொதுவான
வழிபாட்டிடம்

கிராம மட்டத்தில்

கரவெட்டி மேற்கு, கிழக்கு
மட்டத்தில்
தச்சன்தோப்பு ஒரு நல்ல
உதாரணம்

முழுக் கிராமமும் குளாமாக
"கோயில்"
கிராமத்தின் சகல
சமூக அலகுகளுக்கும்
இத்தகைய கோயில்களில்
உரிமை இருக்கும்
(இது 1960 களில் மாறியிருக்கலாம்)

இது பற்றி இன்னுமொரு குறிப்பு

இந்தக் கிராமத்துக் கோயில்
அப்பகுதியிலுள்ள சமூகக் குழு மக்களின் "இணைவாக" அனைவரையும் கோயிலுக்குள்ளே செல்ல அனுமதிகப் படாதவர்களுக்கும் திருவிழா உரிமை உண்டு (இது பின்னர் பறிக்கப்பட்டது)

கரவெட்டி என்னும் குக்கிராமத்திலுள்ள இத்தகைய கோயில்கள் இரண்டு
தச்சன் தோப்புப் பிள்ளையார்
கிராய்ப் பிள்ளையார் (வெல்லனிற் பிள்ளையார்)

இவற்றை விட வழிபாட்டு முக்கியத்துவமுடைய (மூர்த்திகர) வழிபாட்டிடங்களும் உண்டு. அத்துளுவெளிக்குக் கிழக்குப்புறத்தே உள்ள அம்மன் கோயில் அப்படியான ஒரு ஒரு சிறப்பு வழிபாட்டிட மெனலாம்.


தச்சன்தோப்பு பிள்ளையார் கோயில் மூலவ உற்சவமூர்த்தி பூர்வப் பெயர் "சிந்தாமணிப் பிள்ளையார்" இவ் அடை (சிந்தாமணி) அக் கிராமத்து மக்களின் பேச்சு வழக்கில் இல்லை. (சிந்தாமணி – விரும்பிய அனைத்தும் கொடுக்க வல்ல தெய்வமணி என்பது கருத்து) சிந்தாமணி என்ற அடை அக் கோயில்பற்றிய விசுவாச ஆழத்தைச் சுட்டுவது.

கரவெட்டியில் தச்சன்தோப்பின் முக்கியத்துவம், அது இக் கிராமத்தின் ஒரு முக்கிய வாழிட மையப் பகுதியில் உள்ளமைதான். கரவெட்டி கிழக்கும் மேற்கும் பிரிக்கப்படும் தெருவுக்குச் சற்றே மேற்காக அத்துளுகுளம், வயலுக்கு தெற்காக வாழிட நெருக்கமுள்ள மையக்கரவெட்டிக்கு கிழக்காக, வடக்காக உள்ள கோயில் இது.

கோயிலின் உற்பத்தி பற்றிய ஐதீகம் இத்தகைய கோயில்கள் பலவற்றுக்கும் பொதுவானது. தச்சர் ஒருவருக்குச் சொந்தமான காணியில் நிலத்தைக் கிண்டும் (வீடு கட்டுவதற்காக) பொழுது புதைந்து கிடந்த சிலையில் கோடரி பட்டதும் அச்சிலையில் இரத்தம் வந்தமை, இது பற்றி அவ்வூர்ப் பிரமுகர்களுக்கு கனவிற் சொல்லப்பட்டமை. ஆனால் "தோப்பு" என்ற சொல் மரங்கள் நிறைந்த ஒரு பகுதியையே சுட்டும். மேலும் கரவெட்டியில் இன்று தச்சு வேலை செய்யும் குடும்பங்கள் அந்த வட்டாரத்தில் இல்லை.

கோயிலின் தொடக்க வரலாறு தெரியவில்லை. ஆனால் 1930 களிலே இது ஒரு பொதுக் கோயிலாக (public owned) க் கொள்ளப்பட்டிருந்தது. கோயில் திருவிழாக்களைச் செய்யும் குழுக்கள்/ குடும்பங்களின் பிரதிநிதிகளான "தானீசர்" களைக் கொண்ட ஒரு சபையே பிரதான தீர்மானங்களை எடுத்து வந்தது. கோயிலின் அன்றாட நிர்வாகம் கோயில் மணியகாரரிடம் இருந்தது. 1930களில் கோயிலின் மணியகாரரின் வீடு கோயிலுக்கு அருகிலே இருந்தது. இவர்களே கோவிற் காணிச் சொத்துக்காரர்களாக இருந்திருப்பார்கள். எனக்குத் தெரிய இருந்த முதல் மணியகாரர் "குமாரசுவாமி" என்பது இருக்கவேண்டும் போலத் தெரிகிறது. இவருக்குப் பிறகு இவரின் மைத்துனர் கந்தப்பு மணியமாக இருந்தார். கண்ணாடிக் கந்தப்பு என்பது அவர் பட்டப் பெயர். தொடக்கத்தில் அரச ஊழியராக இருந்தவர். அவருக்குப் பின் கரவெட்டி கிழக்கின் பிரபல ஆசிரியர் சின்னத்தம்பி (சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியர், பொன்னாச்சி அக்கா என்ற தலைமையாசிரியையின் , கணவர், குகதாசனுடைய தகப்பன்) மணியமானார்.

கோயிலின் இப்போதுள்ள கட்டிடம் அண்மையில் "திருப்பணி" செய்யப்பட்டது. (1960களின் பின்னர்) முன்னர் யாழ்ப்பாணக் கோயில்கள் பலவற்றுக்கும் பொதுவான "ஆரம்ப பிரித்தானிய காலத்துக்குரிய" (Early British Period) க் குரிய அமைப்பில் கோயில் இருந்தது.



உள்வீதி கருங்கல்லால் கட்டப்பட்டிருந்தது. மூலஸ்தானமும் கருங்கல்தான். (இச் சிறப்பு கிராய்க்கு பின்னர்தான் வந்தது). ஆலயத்து திருக்கோயிற் பணி இடையிலே நின்றுபோய் அந்தக் கருங்கற்கள் கோவிலின் வடகிழக்கு மூலையில் 10-15 வருடங்கள் பயன்படுத்தாமற் கிடந்தன.

தச்சன்தோப்பின் மிகப் பெரிய வைபவம் இரண்டு

- வருடாந்தத் திருவிழா ஆனிப் பூரணையில் தீர்த்தம்

- கந்தசட்டி

இவற்றைவிட பிள்ளையார் கதையும் உண்டு. (காப்புக் கட்டும் விரதம்) இதில் பலர் கலந்துகொள்வதில்லை. திருவெம்பாவையும் முக்கியம்.

கோயிலின் தெற்கு வீதியில் கேணி மாரி காலத்தில் தண்ணீர் நிரம்பி வழியும். 40, 50 அடிப் பாய்ச்சலுக்கு ஏற்ற குளக்கட்டுஅமைப்பு எங்களூர் திறமைசாலிகள் பாய்ந்து குளிப்பார்கள்.

கோயிலின் தென்மேற்கு மூலையில் ஒரு வைரவர் கோயில். இது பலமிக்க ஒரு கோயில் என்ற நம்பிக்கை நிலைத்துள்ளது. அதன் பூசகர் கோவிலின் பண்டாரம் (எங்கள் காலத்தில் சின்னையா அண்ணன்).

கோயிலின் ஈசான மூலையில் "மடம்" இருந்தது. குருக்களின் வீடும் அதற்குள் மடத்து விறாந்தையில் திருவிழாக் காலங்களில் விளையாடுவோம்.

கோயிற் குருக்கள் கிராமத்து நற்கிருத்தியங்களுக்குப் பொறுப்பானவர். அர்ச்சனைப் பணம் அவருக்கு உரியது.

1930, 40களில் மிகச் சிறப்பான திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கம். குறிப்பாக மூன்று திருவிழாக்கள் விசேடமானது. நான்காம் திருவிழா, ஆறாம் திருவிழா, ஏழாம் திருவிழர (ஏழாம் திருவிழா எங்கள் குடும்பத்தினுடையது. எனது பேரனார் நீண்டகாலமாக திருவிழாச் சங்கர்ப்பம் செய்து வந்தார்.) நான்காம் திருவிழா சாதிக்குழு அடிப்படையிலானது. 4ம், 7ம் திருவிழாக்களுள் கடும் போட்டி நிலவியது.

திருவிழா..வைச் சிறப்பாகச் செய்தால் அடுத்த திருவிழா வரை சுபீட்சமான வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

கிராமத்தின் முக்கிய விவசாயக்

குடும்பத்தினர்க்குத் திருவிழாக்கள் இருந்தன (2,5) பிரதான தனிக் குடும்பங்களுக்குத் திருவிழா இருந்தது. தாழ்த்தப்பட்டோருக்கென 3ம் திருவிழா இருந்தது. (3ம் திருவிழா பின்னர் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டது). எட்டாந் திருவிழா வேட்டைத் திருவிழா. அன்று அம்மன் கோவிலுக்கு சாமி வேட்டைக்குச் செல்வார். செல்லும்பொழுது ஏறத்தாழ கிராமத்தைச் சுற்றிச் சென்று திரும்பும் பொழுது அத்துளு வழியாக வருவதுண்டு.

திருவிழாக்களுக்குப் பெரிய மேளம் சின்ன மேளம் வரும். எங்கள் தலைமுறையினர் யாழ்ப்பாணத்தின் பிரபல தவில், நாதஸ்வர வித்துவான்களைக் கண்டது தச்சன்தோப்பில்தான்.கோயில் மேள குடும்பம் நெல்லியடியில் வசித்து வந்தது.

நாளாந்த பூசைக்கு நாதஸ்வரம், தவில் கிடையாது. ஒரு பழைய முரசம் இருந்தது. அதுவும் கோவிலுக்குள்.

மிகப் பெரிய திருவிழாவாக என் மனதில் நிற்பது 1940 களில் ஒரு வருடம் (1944/45 என்று எண்ணுகிறேன்) யாழ்ப்பாணம் வந்திருந்த சினிமாக்காரர்கள் ஜி. இராமநாதன், T.P.ராஜலட்சுமி ஆகியோர் பாட்டுக் கச்சேரிக்காகக் கொண்டு வரப்பட்டனர். அக்காலத்துப் பணத்தில் ரூபா 8000 கொடுக்கப்பட்டது (மிகப் பெரிய தொகை). ஏழாந் திருவிழாவுக்குத்தான் இந்த ஒழுங்கு செய்யப்பட்டது. என் தகப்பனாருக்கு அவர்களை )ஒழுங்கு செய்ததில்" பங்கு இருந்தது. எங்கள் வீட்டுக்கு அவர்கள் வந்து பயணம் சொல்லிப் போனது நன்றாக நினைவில் உள்ளது.

1950களில் படிப்படியாக பெருந் திருவிழா முறைமை கைவிடப்பட்டது. சிங்களச் சட்டத்தின் வருகையின் (1956) பெஞ்சனியர்கள் ஆன சில பெரியவர்கள் பெருந் திருவிழாச் செய்வது சற்று அநாகரிகமானது என்றும் இந்தத் திருவிழாவுக்குப் பதிலாக திருவிழாக் காலத்தில் சொற்பொழிவுகள் நடத்துவதே சிறந்ததென்றும் தீர்மானித்தனர். அத்துடன் திருவிழாக்களுக்கு ஒரு நேரசூசியும் போட்டுவிட்டனர். பகல் திருவிழா மத்தியானம் 12 மணிக்கும் இராத் திருவிழா பத்துமணிக்குள்ளும் முடிய வேண்டும் என்று ஒரு விதி போடப்பட்டது. பென்சனியர்களுக்கத் தெரியாமல் அவர்கள் மூலமாக படிப்படியாக சமஸ்கிருதமயமாக்க *(Sanskritization)* ஆரம்பித்தது. நாலாம், ஏழாம் திருவிழாக் காரர்களுக்கு இது பிடிக்கவில்லை. ஆனால் ஒன்றும் செய்யவும் முடியவில்லை. தங்கள் விருப்பின்மையை மண்டகப் படியில் காட்டினர். (சுவாமி எங்கள் திருவிழாவன்றுதான் முழிப்பாக இருந்தார்" என்பது ஒவ்வொரு திருவிழாக் காரரினதும் நம்பிக்கை.)

சாத்துப்படியையும் இந்தத் தூய்மைவாதம் பிடித்துக்கொண்டது. சாமிக்கும் பொய்க்கால் பொய்க் கை வைத்து சாத்துப்படி செய்யும் மரபு - அவற்றோடு இணைந்த அழகியல் உணர்வும் - போயிற்று. சுவாமி நின்ற கோலம் தான். (சுவாமிக்கு

பொய்க்கால் பொய்க்கை வேண்டாம் என்ற தூய்மை வாதத்தின் பொழுது பண்டிதர் வீரகத்தி சொன்ன ஒரு குறிப்பு நினைவுக்கு வருகின்றது. சிலைக் கால்தான் சுவாமியின் காலா இருந்த கோலங்கள் சுவாமிக்கு இல்லையா?

இந்தத் தூய்மை வாதப்போக்குப்பலம் பெற்ற நாட்களிலேதான் கோயில் பிரவேசப் பயமும் பரவத்தொடங்கியது.

இந்த வரலாறு சுவாரஸ்யமானது. முதலில், மீன், இறைச்சி சாப்பிடாதவர்களே கோவிலுக்குள் போகலாம் என்று வந்தது. இதனால் கோயிலில் எழுந்தருளியில் நடக்கும் திருவிழாப் பூசையைப் பார்க்கும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று. இது பெருத்த எதிர்ப்பை ஏற்படுத்தவே எழுந்தருளியை வெளியே கொண்டு வந்து (உள்வீதி வாசலுக்கு வெளியே) வெளி மண்டபத்து இடப்புறத்தில் வைக்கவேண்டியதாயிற்று.

இதற்கெல்லாம் காரணம் கோயிலுக்குள் செல்லக்கூடாதவர்கள் சென்று விடுவார்கள் என்ற பயமே. மிகுந்த சாமர்த்தியத்துடன் 3ம் திருவிழாப் பொறுப்பு மாற்றப்பட்டது. இதில் ஒரு சுவாரஸயம் என்னவென்றால் இந்த "தற்காப்பு" நடவடிக்கையில் முன்நின்றவர்கள் நாலாம், ஏழாம் திருவிழாக்காரர்கள்தான்.

சொற்பொழிவு முறைமை வந்ததும் அண்டை, அயற் கிராம மக்களும், இளைஞர்களும் தச்சன்தோப்புக்கு (மாலை 6-8) வரத் தொடங்கினர். கம்பன் அடிப்பொடி சா.கணேசன், அ.சா.ஞானசம்பந்தன் முதலியோர் ஆரம்ப காலத்தில் கொண்டுவரப்பட்டனர். ஒரு காலம் எங்கள் குழு (இளைஞர் குழுவின்) மூத்தவரில் ஒருவரான கனகசபை (GPO கனகண்ணை) தான் ஒழுங்கமைப்பாளர்.

கோயிலின் நிர்வாகத்தில் தூய்மை வாதப் போக்குப் பலமடையத் தொடங்கினதால் சாதாரண மக்களைப் பொறுத்த வரையில் இவர்களின் வேலைகளையும் "பிள்ளையாரின் விளையாட்டு" ஆகவே கருதினர்.

இந்த சாதாரண மக்களைப் பொறுத்த வரையில் எங்கள் பிள்ளையாரும் எங்கள் கிராமத்தின் "வாழுநருள்" ஒருவரே. அவருக்குச் சொல்லாமல், தெரிவிக்காமல், வீடுகளில் எந்தக் கருமமும் நடைபெறாது. பிறந்த 40ம் நாள் முதல் கோயில் தொடர்பு உண்டாகி விடுகிறது. எல்லா வீட்டு விசேடங்களுக்கும் பிள்ளையாருக்கும் விசேட கௌரவம் உண்டு. (பிள்ளையார் கோவில் வடையின் ருசியை நான் வேறெந்த இடத்திலும் பெறவில்லை) பிள்ளையார் நாக்கு உள்ள தோழன் தெய்வம், ஆசான், சகலமுமே. (எனது பேத்தியார் தமது 30 வயதில் கணவனை இழந்தார். அன்று முதல் பிள்ளையாரை "அந்தக் குருடன்" என்றே சொல்வார். ஆனால் நாங்கள் கோயிலுக்குப் போய் வருவோம் என்பதில் மிகக் கடுமையாக இருந்தார்.)

கோயில் திருவிழாக் காலம் எங்கள் ஊரின் பொது விடுமுறைக் காலம். (நான் இது பற்றி

ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். Divine presence or Social Prominence – Study of the social role of a hindu Tamil in Jaffna society – Sri Lankan Tamil Society & Politics – NCBH Chennai 1995) ஊர் முழுவதுமே கவலைகள் யாவற்றையும் பத்து நாட்களுக்கு ஒதுக்கி வைத்து விட்டு கலகலப்பாக இருக்கும்.

பிள்ளையார் கோவில் திருவிழாவில் சிறுவர்களாக தண்ணீர்ப் பந்தலில் சக்கரைத்தண்ணீர் வயிறு நிறையக் குடித்து இளைஞர்களாக அந்தக் கருங்கல்லுகளில் உட்கார்ந்து கொண்டு ஊர்விமர்சனம் செய்து கொழும்பிலிருந்து வரும் நண்பர்கள் எல்லோரையும் கோயிலிலே சந்திப்பது விவாதத்தின் பின் மனைவியை நண்பர்களுக்கு அறிமுகம் செய்வது , பிந்துவதோ அம்மாவின் கோபத்துக்கு ஆளாகி அவசர அவசரமாக வீட்டுக்குப் போவது எனப் பலபல நினைவுகள் ஒவ்வொருவருக்கும் வரும்.

இவற்றைப்பற்றி எண்ணும்பொழுதுதான் "பக்தி" எனும் எண்ணக்கரு எமதுசமூக வாழ்வில் பெறும் முக்கியத்துவம் தெரிய வரும். மெத்தப் படித்தவர்கள் என்று நினைப்பவர்கள் பலர் பிள்ளையாரைத் தங்கள் சமூகச்செல்வாக்குக்கான ஏணிப்படியாய் மாற்ற, ஏழை எளியவர்களோ பிள்ளையாரைத் தெய்வமாய், வழிகாட்டியாய், அதுவும் கைபிடித்து வழிகாட்டியாகக் கருதி வழிபடு முறையைப் பார்க்க நெஞ்சுருகும்.

கோவில்களுக்குக் கட்டிடம் வேண்டும்தான். ஆனால் கட்டிடங்களே கோவில் ஆவதில்லை.

சிறு வயது நம்பிக்கைகள் முது வயதில் நம்மை "உழற்றும்" உண்மை நமக்கெல்லோருக்கும் தெரிந்ததே.

கரவெட்டியிலுள்ள எமக்கு தச்சன்தோப்பு நினைவும் அப்படித்தான் உழற்றுகிறது. அதே வேளையில் *தடவியும் விடுகிறது*

மார்க்ஸ் மதம் பற்றிச் சொன்னதன் உண்மை இப்பொழுதுதான் புரிகிறது.

இதயம் என்பது உலகின் ஆன்மாவே. அதனால் அதன் நினைவுகளிலே நாங்கள் "திளைக்கின்றோம்"

தச்சன்தோப்புப் பிள்ளையார் கோயில் என்பதிலும் பார்க்க எமது கிராமத்தின் இன்னொருவராக "தச்சன்தோப்பான்" என்றே கொள்ளத் தோன்றுகின்றது. சாத்தியத் தோட்டத்தான், சண்டில் குளத்தடியான் என்பது போல.

●

# எம் நெஞ்சில் நிழலாடும் இவர்கள்

**கா**லத்தின் பதிவுகள் இன்று அவசியம்.. அனைத்தும் மாறுதல் விதிக்குட்பட்டதுதான்.

மாறுகின்ற தன்மையில் இருந்து விடுபட்டுவிட முடியாதவைகளாகவே இயங்குகின்றன. தனித்தோ கூட்டாகவோ ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாக-காலவேகத்துடன் தன்னை இணைத்துக்கொள்ள எதுவும் தயங்கியதில்லை. அப்படித் தயங்கும் அல்லது தயக்கம் காட்டும்- அல்லது தன்னுள் மயக்கத்தைத் தாங்கிக் கொள்ளும் எதுவும் நிலைத்து நிற்பதில்லை.

சிலவேளை, சில தேவையற்றுப் போகலாம். ஆனால் அந்தத் தேவையற்றவைகளும் கால சூழ்நிலையில் தேவையாகிப் போவதை எம்மால் அறியமுடிகின்றது.

தேவையான-மாறுகின்ற தன்மைகள் கொள்ளும் போது அவை நிகழ்கால வழிகாட்டிகளாக இருக்கும். ஆனாலும் சில சூழ்நிலை காரணமாக அவைகள் மறைந்து போகும் அல்லது அருகிப் போகும் தன்மைக்குள் புகுந்து விடுகின்றன. வழிகாட்டிகள் மறைந்து போகக்கூடாது.

காலத்தின் விழிகள் திறக்க வைக்கும் திறவுகோல்கள்தான் இந்த வழிகாட்டிகள்-அவைகள் தான் காலப்பதிவுகளாக வேண்டியவைகள்.

ஒரு பாதை திருத்தப்படலாம்-அதைப் புதுமைப்படுத்தலாம்-செப்பனிடலாம். ஆனால் அவை அழிந்துவிட நாம் காரணமாக இருக்கக்கூடாது-அனுமதிக்கக்கூடாது.

புதியவை உருவாகலாம்..

புதிய விதிகூட சமைக்கப்படலாம்..

ஆனால், ஒரு வழிகாட்டியாக இருந்த விதிகள் அல்லது நெறிகள் இலகுவில் தூக்கி எறியப்படக்கூடாது. ஏனெனில் அவைகள் இல்லாது இன்னொன்று பிறக்காது-பிறந்ததில்லை என்பதை நாம் உணரவேண்டும்.

"இல்லாமல் பிறவாது அள்ளாமல் குறையாது"

என்பதை நாம் அறிந்திருக்கின்றோம்.

இவைகள் தாம் எம்மால் நினைத்துப்பார்க்க வேண்டியவைகள்.

நினைத்துப் பார்க்க வேண்டியவைகள்தான் காலத்தின் பதிவுகள்.

இன்றைய விதை நாளைய விருட்சம்..இதைப்போன்றே..

இன்றைய பதிவுகள் நாளைய சமூகத்தின் வழிகாட்டிகள்-திருப்பு முனைகள்.

மனித சமூகம் தினம் தினம் - விநாடிக்கு விநாடி திருப்புமுனைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது-அந்தத் திருப்பு முனைகளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

அந்தத் திருப்புமுனைகளின் தோற்றுவாய்கள்தான் காலத்தின் பதிவுகள்.

காலம் காலமாக நாம் மறக்கப்பட்டு விட்டோம். இது இயல்பும், சமூக பொருளாதார பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தில் கொண்ட விழுமியங்களும்- விழிப்புணர்வுத் தன்மைகளின் எல்லைக்கோடுகளும் அந்த நிலைக்குள் எம்மைத் தள்ளிவிட்டுவிடுகின்றன.

ஆனாலும், ஒரு சமூக தன்மையை காலங்கடந்த பின்பும் இன்னொரு சமூகம் அறிய முற்படுவதும்- அந்த முயற்சிக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முயல்வதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

தொல்பொருள் ஆராய்ச்சி என்றும்..
வரலாற்றுக் குறிப்பென்றும்..
வாழ்ந்தவர் வரலாறென்றும்..
வாய்மொழிகள் என்றும்..
பழக்க வழக்கமென்றும்..
வாழ்வியல் பண்பாடென்றும்..
மூப்புத் தேய்ப்பென்றும்..
இப்படிப் பல வகையில் நாம் ஒரு தேடலை ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஒன்றை முழுமையாக அறிவதற்கு எடுக்கும் முயற்சியை எமக்காக நேற்றைய சமூகம் எதை விட்டுச் சென்றது என்பதையும், நேற்றைய பதிவுகளாகவோ அடையாளப்படுத்தக் கூடியதாகவோ எவைகள் இருந்திருக்கின்றன என்பதை அறிய முயற்சி எடுப்பது இயல்காகிவிட்டதொன்று.

ஏன் இவைகளை நாம் அறிய வேண்டும்?
இவைகள் எல்லாம் நமக்குத் தேவையா?
என்ற கேள்விகள் எழுவது இயல்பு.
ஆனால்..
ஒரு பொது விதியாக ஒன்றை நாம் காலம்காலமாக வைத்துக்கொண்டுதான் இருக்கின்றோம்.

இலகுவில் அதை விட்டுவிடுவதில்லை.
தந்தையின் பெயரை எம்மோடு இணைத்துக் கொண்டிருக்கின்றோம்.
இது தேவையா என்ற வினாவை எழுப்பி அதை இலகுவில் உடைத்துவிட முடியாது.
அந்தத் தந்தையின் பெயரைக்கூடத் தாங்காது எம்மால் வாழமுடியும்.
ஆனால்..
அந்தத் தந்தையின் பெயர் மூலம் ஒரு ஒழுங்கமைப்பை எமது மூதாதையர் நிலைமைகளை-அவர்களது வாழ்வு முறைகளை அறியக் கூடியதாக இருக்கின்றது.

இது ஒரு குடும்பத்தின் வரலாற்றின் பகுதி.

ஆனால்..
ஒரு கிராமம்..

அல்லது குறிப்பிட்ட இடத்தின் வாழ்வியல் வரலாறுகளை அறிவதற்கு சிலபல கூறுகளை நாம் கையாள வேண்டும்.
அவைகள் மூலம் அந்தக் கிராம வாழ்க்கை..
அந்தக் கிராம வாழ்க்கை மூலம் மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தும் செய்திகள்..
அந்தச் செய்திகள் மூலம் அந்தக் கிராமத்தின் மேம்பாடு..
அந்த மேம்பாடுகளுக்கான

மூலகர்த்தாக்கள்..

இப்படிப் பல்வேறு கூறுகள் மூலம் ஒரு கிராமத்தின் வரலாற்றை உணர்ந்து கொள்ளலாம்.

ஒரு கிராம வரலாற்றில்..

நிலப்பரப்பும் மக்கள் தொகையும்..
கோயில்கள்..
மக்களின் பண்பாட்டு வாழ்வியல்கள்..
வாழ்ந்தவர்களின் படைப்புக்கள்..
கலைவெளிப்பாடுகள்..
செய்திகள்.
காலத்தின் தன்மைகள்
பொருளாதார விருத்தி..
மக்கள் மனம்..

இப்படிப் பல்வேறு கூறுகளில் பார்க்கலாம்.

பார்க்கப்படும் இவைகள் பதிவுகளாக இருக்க வேண்டும்-இதுவே முக்கியமான பொருள்.

இந்நிலையில் கரவெட்டி என்னும் இடத்தை நோக்கினால் அது வடமராட்சியின் தலைநகரம் இது என்று கூறலாம்.

கரவெட்டி என்ற நிலப்பரப்பு மிகமிகப் பெரியது. பல பகுதிகளாகப்பிரிக்கப்பட்டது. கரவெட்டி கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, மத்தி என்று பல பகுதிகளாக உள்ள பகுதி. ஒவ்வொரு பகுதிக்குள்ளும் பல்வேறு குறிச்சிகள் உண்டு.

இந்த வட்டத்துக்குள் பல்வேறு வகையான அடையாளப்படுத்தப்பட வேண்டியவைகள் இருந்தாலும் படைப்பாளிகள், கலைஞர்கள் என்ற வகையில் பலர் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவர்களது சேவைகள் சமூக நலன் பேணப்பட்டதுடன், சமூகத்தின் முன் இவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு காலத்தின் பதிவுகளாக இருந்துள்ளார்கள்.

இன்றைய-நடைமுறைச் சமூகம் இவர்களை அடையாளம் காணவில்லை எனில் எதிர்காலம் இவர்களது காலத்துப் பணிகள், படைப்புக்கள், அவர்களது வாழ்வியல் நோக்கம் அனைத்தையும் தோற்கடித்துவிடும். சமகாலக் கலைஞன் கடந்த கால கலைஞனை மீட்டுப் பார்க்கின்றான்.

இந்த இருகாலக் கலைஞர்களை எதிர்காலக் கலைஞன் மீட்டுப்பார்க்கக் காத்திருக்கின்றான்.

கரவை கலைஞர்கள் படைப்பாளிகள் பண்பாட்டியல் கூறுகளில் இருந்து வெளிப்பட்டதுடன் அந்த அந்தச் சமூகத்தின் முழுமையான பிரதிநிதியாக அவனே விளங்குகின்றான்.

ஒரு சமூகத்தை, கிராமத்தை, இனத்தை எடைபோட்டுப் பார்ப்பதற்கு அந்தச் சமூகத்தை, கிராமத்தை, இனத்தைச் சார்ந்த கலைஞர்களை படைப்பாளிகளை எடுத்து நோக்க வேண்டும். அப்படி நோக்கும்போதுதான் அந்தச் சமூக கிராம இன மக்களின் வாழ்வியல், அதன் தத்துவார்த்தம் இவைகளுடாக வெற்றிகொண்ட வரலாறுகளை அறிந்து கொள்ள முடியும்.

எனவே, கலைஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள் அனைவரையும் இளம் சமூகத்தின் முன் அறிமுகப்படுத்தி முன்னிலைப்படுத்த வேண்டிய நிலையில் நாம் -இன்றைய சமூகம் இருக்கின்றது. அந்த வகையில் கரவெட்டியில் பல எழுத்தாளர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் இருந்திருக்கின்றார்கள் இப்பொழுதும் பலர் இருந்து கொண்டிருக்கின்றார்கள். கரவெட்டியின் மண்வாசம் இவர்களால் பேசப்படுகின்றன.

இத்தகையவர்கள் பற்றி சிறிது பார்ப்பது நன்று. எனவேதான் இதன்மூலம் அவர்கள் கௌரவப்படுத்துவதாக நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

கலையுலகின் முதல் வழித்தோற்றுவாயாகக் கூத்தினை எடுத்துக்கொள்ளலாம். கூத்துவடிவம் என்பது தாளலய கட்டுப்பாட்டுக்குள் கொண்டது. அன்றைய நாட்களில் இதற்கு அதிக மதிப்பு இருந்தது.

ஒரு சமூக வளர்ச்சியின் முதிர்ச்சித் தன்மையை வெளிக் கொண்டு வருவதற்கு மட்டுமல்ல சமூகத்தின் உளவியல் பண்பாட்டினை மூலதனமாக்கிக் கொண்டவைகள் இந்தக் கூத்து வடிவங்களே.

ஆடல் கூத்து, தெருக்கூத்து எனப் பலவகைகளாக இருந்து ஆடப்பட்ட கூத்தினை ஒரு சீராக்கி பார்வையாளர்கள் மத்தியில் கொண்டுசெல்லும் பணியினைப்பல அண்ணாவிமார்கள் செயல்பட்டிருக்கின்றார்கள்.

அன்று கூத்துக்கள் என்றால் அதைக்கிண்டல் செய்பவர்களாகவே இருப்பார்கள். அதாவது நாடக்கலைஞர்களை சமூகத்தில் பெரு அந்தஸ்து கொடுப்பதில்லை. ஆனால் இன்று பல்கலைகழகங்கள்வரை அது சென்றுவிட்டது. அது பற்றி ஆய்வு செய்யத்தொடங்கிவிட்டார்கள். அந்தப் பெருமை பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்களையே சாரும்.

## அண்ணாவியார்
## எம்.வீ.கிருஷ்ணாழ்வார்

அண்ணாவியார் மரபுக் கூத்தினை ஆரம்பித்து வைத்த பெருமை கரவை நாடகக் கவிமணி எம்.வி.கிருஷ்ணாழ்வார் அவர்களைச் சாரும் எனலாம். இவரது வாழ்க்கை முழுமையும் அண்ணாவியார் மரபுக் கூத்தினைக் கொண்டதாக அமைந்தது எனலாம். இவர் 1895ல் பிறந்து 12 வயதில் இருந்து கூத்து கலை என்றே தன் வாழ்க்கையைச் செலுத்தி இருக்கின்றார். இவர் தனது நடிப்புமூலம் தன்னை இனங்காட்டிக் கொண்டதன் அடிப்படையில் விரைவிலேயே அண்ணாவியார் என்ற பெயரையும் பெற்றுக்கொண்டார். இவர் அதிகமாகப் பெண் பாத்திரத்தை ஏற்று நடித்திருந்தாலும் ஆண்பாத்திரத்தில் தன் கம்பீரத்தைக் காட்டத்தவறவில்லை. இவரது கலையுலக வாழ்க்கைப்பகுதியில் இந்தியக் கலைஞர்களுடன் போட்டிபோட்டு நடித்த வரலாறு இவரைப் பெருமைப்படுத்தியதுடன் கரவை மண்ணை பெருமைப்படுத்தியது எனலாம். இந்தியாவில் இருந்து வரும் கூத்துக் கலைஞர்கள் இவருடன் நடிக்கவேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டிருந்ததையும் கூத்து முடிந்ததும் இவரை வானளாவப் புகழ்ந்தும் இவருடன் இணைந்து நடித்ததைத் தம் வாழ்க்கையில் கிடைத்த பெரும் பாக்கியம் என்று சொல்லிப் பெருமைப்பட்ட நிகழ்வுகள் ஏராளம் உண்டு. கூத்தக்களில் எத்தனை வகைகள் உண்டோ அத்தனையும் இவர் கைவண்ணத்தில் உருவாகியது என்பதுமட்டுமல்ல பல நல்ல கலைஞர்களை உருவாக்கிவிட்டுப்போன வரலாறும் இவருக்குண்டு.

இவரது கலைப்பணியை மேடையில் பார்த்துவிட்ட ஒரு ஆங்கிலேயர் 1931 பங்குனி 15ல் ஒரு பாராட்டுரை வழங்கி இருந்தார்..

I have nothing . But the sincerest admiration for the superb acting of

MVKrishnalvar. I had the Privilege of seeing him in the role of Ehelepola Kumarihamy. It was a revelation'

இப்படிப்பாராட்டியுள்ளார். இவரது கலைப்பயணம் கரவெட்டி மண்ணுடன் நின்றதல்ல இலங்கை முழுவதிலும், இந்தியா, மலேசியா போன்ற நாடுகளையும் கடந்து சென்று கரவை மண்ணின் மைந்தன் நான் என்பதை நிரூபித்து வந்தவர். எம்.கே.தியாகராஜபாகவதருடன் சேர்ந்து நடித்தவர் என்பது புதிய செய்தியாக இருப்பினும் இவருடன் நடித்தமையால் அன்று கொடிகட்டிப் பறந்த தியாகராஜ பாகவதரின் புகழ்போல் ஈழத்தில் இவரது புகழ் கொடிகட்டிப்பறந்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இவரது நாடக ஆசானாக உடுப்பிட்டி அண்ணாவியார் ஆறுமுகம் என்பவரும் இலக்கண ஆசானாக பண்டிதர் மயில்வாகனமும் இருந்துள்ளார்கள். இவர்களது வழிகாட்டல் இவரது கலைப்பயணத்தில் பெரும்பங்கு வகித்தாலும் இவரது ஆற்றல் இவரை அடையாளப்படுத்தியது என்பதில் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது.

## பண்டிதர் கரவை. கவீ

கரவை தந்த ஒரு பெரும் தமிழ்வல்லுநர் எல்லாராலும் கவீ என்றழைக்கப்படும் பண்டிதர் க.வீரகத்தி என்பவர். இவர் கரவெட்டி கவுந்திலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இளவயது முதல் தமிழில் அதிக பற்றும் பாசமும் கொண்டவர். அதனால் பண்டிதராகி தமிழுக்கே தொண்டு செய்த இவர் புலோலியூர் கந்தமுருகேசன் அவர்களின் மாணவராக

இருந்திருக்கின்றார். கரவெட்டியில் சரஷ்வதி மகாவித்தயாசாலை அதிபராக இருந்த அவர் புதிய சிந்தனாவாதியாகத் தன்னை மாற்றிக்கொண்டு புதிய புதிய தகவல்களை கொண்ட பல புத்தகங்களை எழுதி இந்தச் சமூகத்தின் மத்தியில் தன் கருத்துக்களை விதைத்தார். இவரது ஆரம்ப சேவையில் சிறுவர்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்தார் அத்துடன் அவர்களுக்கான பாடவிதானங்களை அதற்கான பயிற்சிப் புத்தகங்களை ஏற்படுத்திக் கொடுத்து இளஞ்சிறுவர்களுக்கு வளர்ச்சிப்பாதை ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தார். அத்துடன் முதியோர்களது வளர்ச்சிப்பாதையிலும் அதிக அக்கறை எடுத்து அவர்களுக்கான கல்வியமைப்புக்களை ஏற்படுத்தும் நோக்குடன் வாணி கலைக்கூடம் ஒன்றை ஆரம்பித்து பல அறிஞர்களை உருவாக்கிய பெருமையும் பல எண்ணுக் கணக்கில் லா சைவப்புலவர்களை உருவாக்கி கரவெட்டி மண்ணுக்கு பெருமையைச் சேர்த்துக் கொண்டார்.

இவரது வாழ்க்கையில் ஓர் இனம் ஓர் உலகம் என்ற தத்துவம் இருந்து வந்துள்ளது. அதற்காகத் தன்னை தயார்படுத்தி அதற்காகத்தனது வாழ்க்கை அமைத்துக் கொண்டவர். அவர் எழுதிய ஓருலகம் என்ற புத்தகத்தில்..

ஊனுயிர் நாளுள வரைக்கும்
ஓருயிர் அரசென்றே பாடி
மானுட நேசிப்பை வளர்ப்பேன்
மன்பதை புன்னகை பூக்கும்

என்றே முகவரியிட்டுள்ளார் என்றால் பாருங்கள். இவரது கிருதயுகம் என்னும் பாடல்ல் முதல் கவிதை இதுதான்.

இவரிடம் பயின்றவர்கள் இதுவரை எதிலும் தோற்றதில்லை எனலாம்.

இவரது நூல்கள் ஏராளம் . கவிதை, தமிழ் இலக்கணம், கவிதை இலக்கணம், உரைவிளக்கமாக இந்துமதம்,

கிறிஸ்தவமதம்.இஸ்லாமிய மதம் எல்லாமதத்திற்கும் பொதுவாக எனப் பல நூல்களை எழுதி தன் பிறப்பின் மகிமையை உணர்த்தியுள்ளார்.

## பண்டிதர் பொன்.கணேசன்

சமூகப் பொதுவுடமைப் பார்வைகளைத் தன்னகப்படுத்திக் கொண்டு தமிழ்மீது பற்றுக்கொண்டு தமிழையும் சமூகத்தையும் இணைத்துப் பார்த்த ஒருவர். இவர் ஒரு பட்டதாரி ஆனால் காட்சிக்கு மிகவும் எழிமையானவர்.

இவரது பல எழுத்தப் படைப்புக்கள் சமூகத்துக்காகப்பயன்பட்டன.

கவியாக்கம்-

இலக்கியத் தர்க்கம்-

பட்டிமன்றம்

இப்படிப் பலவிதமான துறைகளில் கால்பதித்து வெற்றிக் கொடிநாட்டியவர்.

இவர் தான் படித்த யாழ்.கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து அதே கல்லூரியில் அதிபராக இருந்த பெருமையும் இவருக்குண்டு. அதன்பின் கல்வி உயர் அதிகாரியாகவும் பணியாற்றியபெருமையும் இவருக்குண்டு. இவரது மறைவு பத்து வருடங்களைத் தாண்டிவிட்டாலும் இவரது நினைவுகள் எம்மை விட்டகலாது.

## ஆசிரியர் திரு. வீ. நடேசு

பண்டிதர் பொன்.கணேசன் அவர்களின் காலத்தை இவர் கொண்டிருந்தார். படிக்கும் காலம் தொட்டு தன் கல்விச்சேவையைத் தொடரும்போதும் தமிழின்பால் காதல் கொண்டு அதற்காக தன்னை அர்ப்பணித்தவர். இவர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பொருளாதாரத் துறையைப் படிப்பிக்கும் ஆசிரியராகக் கடமையாற்றி இருந்தாலும் இவரது இலக்கிய சேவையும் சமூகக் கண்ணோட்டமும் கரவை மண்ணினால் பாராட்டப்பட்ட ஒன்றாகும். இவரது பொதுப்பணித்துறைகளுக்காக கரவெட்டி சிந்தாமணி சனசமூக நிலையத்தில் தன்னை அங்கத்தவராகக் கொண்டு அதன்மூலம் சமூக முன்னேற்றத்திற்கு தன் செயல்பாடுகளை விரிவு படுத்திக் கொண்டார்.

## பண்டிதர் கந்தையா கணபதிப்பிள்ளை

வாழ்வில் தமிழைவிட எதுவும் இல்லை என்று நினைத்து வாழ்ந்த ஒருவர். தமிழை வளர்க்கவும் அதன்மூலம் தன் ஓர் எழுச்சிமிக தமிழ் இளஞ்சமூகத்தை உருவாக்கவும் பாடுபட்டார். இவரது ஆசிரியச் சேவை யாழ்.கரவெட்டி யார்க்கரை விநாயக வித்தியாசாலையில் ஆரம்பிக்கப்பட்டு தன் கடமையில் தன்னலம் கருதாத சேவை காரணமாக விரைவான பதவி உயர்வு பெற்று கரவெட்டி ஞானாசாரியாக் கல்லூரியில் அதிபராகப் பணிபுரிந்தார். இவரது கல்விச்சேவையில் இவரது மாணவர்கள் ஒழுக்கம் படிப்பு இவைகளில் கவனம் செலுத்தவேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தார். இதில் கடுமையான போக்கைக் கொண்டிருந்தாலும் இவரது மாணவர்கள் சமூகத்தில் மதிப்போடு இருக்கும்போது இவரது கடுமைகூட இன்று அவர்களுக்குச் சுகமாக இருக்கின்றது.

இவரது எண்ணம், செயல், நினைப்பு அத்தனையும் தமிழ்தான். இவர் கந்த முருகேசனாரின் மாணவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

## சொல்வேந்தன் கரவை.செல்லையா பாலசுப்பிரமணியம்

ஒரு வித்தியாசமான மனிதர்.

பார்க்கும் போது பழகும்போது மிகவும் எழிமையான தன்மை கொண்டவர்.

இவர் ஒரு இந்தியப் பல்கலைக்கழகப் பட்டதாரி.

படிப்பை முடித்ததும் கொழும்பு ஆனந்தாக் கல்லூாரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிவிட்டு-இலங்கைப் போக்குவரத்துச் சபையில் நிர்வாக அதிபராகப் பணியாற்றியவர்.

இவரிடம் வெளிப்படும் சொல்லாட்சி யாரிடமும் காணமுடியாது எனலாம்.

தமிழ் ஆங்கிலம் இருமொழிகளிலும் புலமை பெற்றதுடன் தமிழை எப்படி அடுக்குமொழிபோல பேச முடியுமோ அதே போன்று ஆங்கிலத்திலும் அழகான அடுக்கு மொழிகளில் பேசும் தன்மை கொண்டவர். இவரது எழுத்து நடைகூட மற்றவர்களை வசீகரிக்கும் தன்மை கொண்டது. இவையாவும் கரவை மண்ணில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. புதிய விதி ஒன்றை எழுத்தில் அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

இலக்கியப்பணியில் தன்னை உட்படுத்திக்கொண்ட இவர் கந்த முருகேசனாரிடமும் திண்ணைப்பள்ளியில் கல்வி பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூகப்பார்வையில் ஒரு பொதுவுடமைவாதியாக இயங்கி கரவை மண்ணுக்கு பணியாற்றியபோதுதான் கரவை வள்ளுவர் மன்றம் உதயமானது. அதன் காப்பாளராக இருந்து 1980ல் இறக்கும்வரை அதன் மூலம் கலைப்பணியாற்றி சமூகத்தொண்டு செய்தவர்.

கரவைவள்ளுவர் மன்றம் தயாரிக்கும் எந்த ஒரு கலைப்படைப்பிலும் இவரது ஆலோசனையில்லாமல் போனது கிடையாது. அதனை சரியான முறையில் வழிநடாத்தி நெறிப்படுத்தி சமூகத்தைப் பேணும் கலைப்படைப்புக்களைத் தந்த பெருமை இவருக்குண்டு.

## பல்கலைவித்தகர் ஐயாண்ணன்

இவரை விதந்துரைப்பதென்பது வானத்தை கைக்குள் வைப்பது போன்றது.

இவரது கலைவெளிப்பாடு வித்தியாசமானது.

நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இளவயது முதல் இசைக்கருவி வாத்தியங்களில் நாட்டங் கொண்டு அதில் பயிற்சி பெற்று அதில் வித்தகத் தன்மையை ஏற்படுத்திக் கொண்டார்.

பொதுவாக ஒருவர் ஒர் இசைக்கருவியில் புலமை பெற்று இருப்பார் அல்லது இரண்டாக உயர்த்திக் கொள்வார். ஆனால் ஒருவர் இருபத்தைந்து இசைக்கருவிகளை வித்தகத் தன்மையுடன் வாசிக்கின்றார் என்றால் அதை நம்பமுடியுமா. நம்பித்தான் ஆக வேண்டும் ..ஆம் அவர்தான் பல்கலைவித்தகர் ஐயா அண்ணன் அவர்கள்.

## தோழர் பொன். கந்தையா

இவரைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது.

இவரது வாழ்க்கை பொதுவாழ்க்கையாகத்தான் இருந்தது. மனிதப்பிறவி எதற்காக என்று கேட்டால் மனித சமூகம் வாழ்வதற்க இப்பிறவி பயன்பட வேண்டும் என்பார்.

அதை அடிப்படையாகத் தன் வாழ்க்கையில் கொண்டு தன் பொதுவாழ்க்கைக்கு பொதுவுடமைக் கட்சியான கம்யூனிசக் கட்சியில் தன்னை இணைத்து சமூகம் என்ற நிலை மாறி இனம் என்ற இடத்திற்குத் தன்னை நகர்த்தி ஒரு பொருளியல்கோட்பாடுகளை முன் வைத்து

அரசியலில் போராட்டத்தை நடாத்தினார்.

இவற்றை எல்லாம் வென்றால்போல் வடமாகாணத்தில் இருந்து ஒரு பொதுவுடமைக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வென்று பாராளு - மன்றத்திற்குப் போன ஒரேயொரு வேட்பாளர் இவர்தான். அந்தப் பெருமை கரவெட்டியைச் சாரும்.

## தோழர் பொன். குமாரசாமி

இவரும் தோழர் பொன் கந்தையா வழியைப் பின்பற்றி கம்யூனிசத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பொதுச் சேவையாற்றினார். இவர் கம்யூனிசக் கட்சியின் முக்கிய செயல்குழு உறுப்பினராக இருந்ததுடன் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளராக இருந்து அவர்களுக்காகப் பணியாற்றினார். கம்யூனிசக் கட்சியின் பொருளாளராக இருந்து அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். இவரது சேவையை கரவெட்டி பெற்றமையால் இவர்மூலம் கரவெட்டி பெருமைப்படுகின்றது.

## கரவைக் கிழார்

இவர் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டும் அரசதொழிலில் இருந்த போதிலும் தமிழில் அதிக பற்றுக் கொண்டிருந்தவர். தமிழில் பல நூல்கள் எழுதியும் தமிழ்த் தொண்டு செய்தும் வந்தார். இவர் எழுதிய தணியாத தாகம் என்னும் புத்தகம் பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டதுடன் இந்தப் பெயர் தொடர்பான வழக்கொன்று நடைபெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### கலைத்தென்றல் கரவை. செ. அருளானந்தம்

தன்னிகரில்லாக் கலைஞன்.

கரவை வள்ளுவர் மன்றத்தின் தோற்றுவாயின் மூலகர்த்தா. நவீன நாடக உலகில் தன் முத்திரைகளைப் பதித்தவர். எத்தனையோ எண்ணுக்கணக்கில்லா நாடகங்களைத் தயாரித்தும் இயக்கியும் நடித்தும் கலையுலகில் கரவை மண்ணின் பெயரையும் மதிப்பையும் உயர்த்தியவர்.

பல்குரல் மன்னன் என்றும் நடிப்பில் மெருகூட்டியும் கொண்டு வந்த இவர் ஆரம்பகாலத்தில் பெண் பாத்திரத்தை ஏற்று நடித்தவர். கொடுக்கின்ற எந்தப் பாத்திரமானாலும் அதைச்சிறப்பாகச் செய்து வந்ததுடன் புதிய புதிய கலைஞர்களை அறிமுகப்படுத்துவதில் அக்கறை கொண்டிருந்தார்.

இவரது காலத்தில் இவருடன் கரவை விநாயகம், கரவை. நடேசு, கரவை தனபால், கீழ்கரவை. பொன்னையன் போன்றோர் பணியாற்றி இருக்கின்றார்கள்.

நாடகம் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இவர் ஒரு இலக்கணப் புத்தகம் என்று சொல்ல வேண்டும்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் மாணவர்களில் இவரும் ஒருவர் என்பது மிகமிகக் குறிப்பிட வேண்டிய தொன்று.

இவர் இயக்கத்தில் வெளிவந்த நாடகங்களில் சங்கரர், காதலும் கத்தரிக்காயும், பூசாரி, வாழ்வா சாவா, வெளிக்கிடடி வீட்டாலை, எடடி உலக்கையை, சீரளிந்த சின்னம்மா போன்ற நாடகங்கள் பல வெற்றிகளைக் குவித்தன.

ஒவ்வொரு நாடகங்களைத் தாயாரிக்கும் போதும் அவைபற்றிய கருத்தை நன்றாகப் பரீசீலித்து அவை சமூக கண்ணோட்டத்துடன் இருக்க வேண்டுமென்று பார்த்துக் கொள்வார்.

இவரது கலைவாழ்க்கை இளவயதில் ஆரம்பமாகியதுடன் அதற்காகத் தமிழைப் படிக்கவேண்டுமென்ற ஆர்வத்துடன் சைவப்புலவர் பரீட்சையிலும் சித்தியடைந்து அந்தத் தமிழை தன்

நாடகத்துக்காகப்பயன்படுத்தினார்.

தன் படிப்பிற்காக இந்தியா சென்றபோது தான் சென்ற கற்கை நெறியை விட்டுவிட்டு நாடகத்துறையில் அதிக கவனம் எடுத்து கற்றுக்கொண்டு தாய்மண் வந்ததும் கரவை மண்ணின் பெயரை நிலைநாட்டும்பொருட்டு புதியயுக்திமுறைகளைக் கொண்டு நாடகங்களைத் தயாரித்தார்.

அவர் வாழும் காலத்தில் அடிக்கடி தன் காலம்முழுவதும் கலைச்சேவையில் இருக்க வேண்டும் என்று கூறுவார். அதே போன்று 1995ல் நாடகப்போட்டியில் பங்குபற்றி அதில் சிறந்த நாடகம் சிறந்த நடிகர் என்ற தேர்வில் தெரிவுசெய்யப்பட்டு அதற்குரிய பரிசினை வேண்டிக்கொண்டு மேடையைவிட்டு இறங்கும்போது அவர் உயிர் பிரிகிறது.

கலைக்காக வாழ்ந்த ஒருவர் கலை மேடையில் தன் வாழ்வை முடித்துக்கொண்டது நினைக்கமுடியாத ஒன்று.

## எழுத்தாளன்
## திரு.நெல்லை க. பேரன்

பேரம்பலம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் கரவெட்டி நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அரசாங்க உத்தியோகத்தில் இருந்தாலும் அவரது உயிர்மூச்சாக எழுத்து இருந்தது.

காலம்முழுவதும் எழுதிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட இவர் ஒரு தரமான இலக்கியவாதி. பல கவியரங்கங்களில் இலக்கிய மேடைகளில் இவரைக் காணலாம்.

இவரது எழுத்துப் படைப்பில் ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகின்றாள் என்ற நாவல் பிரபல்யமானதும் அன்றைய காலகட்டத்தில் அனைவராலும் பாராட்டப்பட்ட கதையாகும்.

எண்ணுக்கணக்கில்லாத சிறுகதை, கவிதை, கட்டுரைகள் எழுதி கரவை மண்ணின் பெயருக்குப் புகழ்சேர்த்துள்ளார்.

அம்பலத்தாடிகள் என்றால் ஈழ மண்ணில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஒரு காலத்தில் புதுமையான, புதிய புரட்சிகரக் கருத்துக்களை மேடையில் கலை வடிவமாகப் படைத்த குழுதான் இந்த அம்பலக்கூத்தாடிகள். தாளலய நாடகங்களை உருவாக்கிய பெருமை இவர்களைச் சாரும். இவர்களது வளர்ச்சியைக் கண்ட பல்கலைக்கழகக் குழுக்கள் இவர்களுடன் சேர்ந்து நாடகம் மேடையேற்ற வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர் என்றால் இந்த அம்பலக்கூத்தாடிகளின் பெருமையைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இந்த அம்பலக் கூத்தாடிகளின் ஆரம்ப கர்த்தாக்களில் நெல்லை க.பேரன் அவர்கள் மிகமுக்கியமானவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த அம்பலக்கூத்தாடிகள் தான் மாவிட்டபுரப் பிரச்சனையை கந்தன்கருணை தாளலய நாடகமூலம் முன்னெடுத்து பெரும் புரட்சியை வெடிக்க வைத்தனர்.

அரசியல் ரீயாக பல்லக்கு என்ற தாளலய நாடகம் போட்டு பெரும் அதிரடி நடிவடிக்கைகளை எடுத்தனர்.

நெல்லை க.பேரன் அவர்கள் ஒரு பொதுவுடமைவாதியாக இருந்து வாழ்ந்து வந்த அவர் இறுதிக்காலத்தில் இராணுவ குண்டு வீச்சில் அவரது வீட்டு முற்றத்தில் அவர் தன் மனைவி பிள்ளைகளுடன் சேர்ந்துபலியாகிப்போனது மறக்கமுடியாத துன்பியல் செய்தியாகும்.

**இலங்கையர்கோன் சிரித்திரன் ஆசிரியர் திரு. சி. சிவஞானசுந்தரம்**

கரவெட்டி கிழக்கைப்பிறப்பிடமாகக்

கொண்ட இவர் இளவயதுமுதலே இலக்கிய நயம் அத்துடன் நகைச்சுவை நயம் கொண்டிருந்தார். இதனால் பத்திரிகைளில் சவாரித்தம்பர் என்ற நகைச்சுவைச் சித்திரங்களும் செய்திகளும் எழுதிக் கொண்டு வந்த இவர் ஒர் நகைச்சுவைச் சஞ்சிகை ஏன் நடாத்தக்கூடாது என்ற எத்தனிப்பில் உதயமானதுதான் சிரித்திரன் சஞ்சிகை.

இதன்மூலம் பல நகைச்சுவை கதைகள்,நகைச்சுவைத் துணுக்குகள், கேள்விகளுக்கு நகைச்சுவைப் பதில்கள் தந்து சமூக சீர் திருத்தவாதியாக இயங்கினார்.

வாழ்க்கையையே நகைச்சுவையாக மாற்றி அமைத்துக் கொண்ட இவர் கரவை மண்ணின் வாழ்வை, அதன் சுவையை என்றும் மறந்ததில்லை.

இப்படி எத்தனை பேர்களின் சிறப்புக்களை நாம் நினைவுபடுத்திக் கொண்டு போகலாம். கரவை மண் இவர்களால் பெருமை பெற்றது. அதைப்போல கரவை மண்ணினால் இவர்கள் பெருமை பெற்றார்கள்.

இன்றுகூட பலர் கரவை மண்ணின் மைந்தர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இலக்கிய உலகம் வியக்கும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள், கரவை மண்ணில் இருந்துகொண்டு கவி இலக்கியம் படைத்துவரும் மன்னவன் என்றழைக்கப்படும் திரு மு.கந்தப்பு (முன்னாள் அதிபர், மாணிக்க வாசகர் வித்தியாலயம்) சுவிசில் இருந்து இன்றும் கலைச்சேவை செய்து கொண்டிருக்கும் கரவை விநாயகம், ஜெர்மனியில் இருந்து கொண்டு தமிழ்சேவை செய்துவரும் கவிவேந்தன் கரவை வேலாயுதம், பிரான்சில் இருந்து கலை இலக்கியப் பணி செய்து கொண்டிருக்கும் கீழ்கரவை. பொன்னையன் (வியூகன்) இவர்கள் அனைவரும் கரவை மண்ணின் மைந்தர்கள்தான்.

காலத்தால் மறக்க முடியாத - எம்நெஞ்சில் நிழலாடும் இவர்களைக் கொளரவிப்பதில் கரவை மண் பெருமைப்படுகின்றது.

இவர்கள் மட்டுமல்ல பல மைந்தர்கள் கரவை மண்ணுக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களும் ஒருநாள் அடையாளப்படுத்தப்படுவார்கள் என்பதில் எமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு.

**தொகுப்பு- வியூகன்**
***Viyugan,***
ENS Pavillon,
7 Quai de la Marine,
93450 L'Ile Saint-Denis.
France.
e.mail: Viyugan@ Worldonline.fr

உ
சிவமயம்

# கரவை சிந்தாமணி விநாயகரை வேண்டி பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் பாடப்படும் திருவூஞ்சல் பாமாலை – 2001 வாழ்த்துக்கள்

வாழ்வின் நெறிமுறைகளை மறப்பதும் தெய்வ வழிபாட்டை வெறுப்பதும் அறத்தை மறுப்பதும் உண்மைகளை ஒழிப்பதும் பிறர்க்குத் துன்பம் செய்து களிப்பதும் வஞ்சகர்கள் வாழ்வில் வெற்றி நல்கும் ஆயுதங்களானாலும் நல்லவர்கள் தர்ம நெறிகள் தோற்றுவிடுமோ?

கரவை வெட்டிய கரவெட்டி மக்கள் எங்கு வாழ்ந்தாலும் எக்காலமும் தெய்வ தெய்வ வழிபாட்டைக் கைவிடாதவர்கள் என்பது ஓர் வரலாற்று உண்மையாகும்.

இறுதி மூச்சுவரை இறைவன் மறதியிலே, மறந்து வாழும் மனிதர்கள் பலர். புனித நினைவுகள் மனம் புண்பட்டபின்புதான். தினம் குணப்படுபவன் மனிதன். செய்தவினை சேரும் செய்தவரையே சாரும். கொண்டு வந்ததும் ஏதுமில்லை. கொண்டு செல்வதும் செய்த வினைகள் தவிர வேறு ஏதுமில்லை. பிறவி வினை அகற்ற உறவுகளே கூடுங்கள். பாரிஸ் கரவை நண்பர்களே பாடுங்கள் திருவூஞ்சல் பாட்டு. கரவைக் கணபதியும் பாரிஸ் மாண்புமிகு ஸ்ரீ மாணிக்க விநாயகரும் வேறில்லைக் காண்பீர். பேணி அருள் போற்றிடுவீர். பிணியெலாம் அகன்று வாழ்ந்திடுவீர்.

புத்திக்கும் பக்திக்கும் கரவை மக்கள் அருட் சித்திக்கும் அருளணி சேர்ப்பவர் சிந்தாமணி விநாயகரே. கரவை நண்பர்களின் புனித பணி மென்மேலும் வளர்ந்து வளம்பெற சித்தி விநாயகரை வேண்டி வாழ்த்துகிறேன்.

பணிவன்புடன்
**சி வேலாயுதம்**
ஆசிரியர்
"கரவைக் கோவை"
14.05.2001

**செல்லையா வீரவாகு** LLB
லண்டன்
வழக்கறிஞர்

04. 06. 01

## பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்பவவானிலும் நனிசிறந்தனவே

ஆயிரக்கணக்கான மைல்கடந்து எங்கெங்கோ அன்னிய தேசங்களில்பரந்து வாழ்ந்தாலும் நாம் பிறந்து வளர்ந்த மண்ணை நாம் மறக்கவில்லை. நம் சகோதரர்கள் மறக்கவில்லை. மறக்க முடியாது. தச்சைத் திருப்பதிவாழ் சிந்தாமணி விநாயகரின் நினைவாக பிரான்ஸ் வாழ் கரவைச் சகோதரர்கள் எடுத்து வரும் இவ் விழா எமக்கெல்லாம் பெருமை சேர்க்கும். விநாயகரிடம் கொண்ட ஆழமான நம்பிக்கையினால் முழு மனதுடனும் மிகுந்த உற்சாகத்துடனும் நம் சகோதரர்கள் நடாத்துகின்ற இத் திருவிழா சிறப்பாக நடக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

தச்சன்தோப்பு திருவிழாக்காலம் கரவெட்டி மண்ணின் ஒரு பெரு விழாக்காலம். இன்னும் எனது மனதில் நிறைந்திருக்கும் பசுமையான நினைவுகள்.

நம் சகோதர சகோதரிகள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒரு புது உணர்வை ஏற்படுத்தி தம்மையெல்லாம் தூய்மைப்படுத்தி கோயிலுக்கு வந்து ஆண்டவன் தரிசனத்துக்காக வீதியெங்கும் நிறைந்திருந்த அந்தக் காட்சியையெல்லாம் நான் நினைத்துப் பார்க்கிறேன். அண்ணன், தம்பி, மச்சான், மாமன் என்று ஒன்றுகூடி மகிழ்ந்திருந்த அந்தச் சன்னிதானம், நம் சகோதரர்கள் நண்பர்களுடன் உற்றார் உறவினர்களுடன் கருங்கற்களிலும் மகிழ மரத்தின் கீழும் கேணிப்படிகளிலும் தேர்முட்டியடியிலும் புலிமுகப் பந்தலின் கீழும் வீதியோரங்களிலும் நாம் எல்லாம் கூடியிருந்து மகிழ்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

கொடி, குடை ஆலவட்டத்துடன் விநாயகப்பெருமானை அலங்கரித்து வீதி சுத்தி தூக்கி வலம் வந்த காட்சி, தேசியையருடனும், செல்லையா வாத்தியாருடனும் நாமெல்லாம் தேவாரம்பாடி பின்தொடர்ந்ததும் வீதிக்கு வீதி ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்து வழிபட்டு நின்ற அந்தக் காட்சி, நாமும் நம் சகோதரர்களும் அங்கப்பிரதட்சணை செய்து ஆலயத்தை வலம் வந்ததும் சகோதரிகள் அடியழித்ததும் கொழுத்தும் வெய்யிலிலும் எரியும் கற்பூரச்சட்டியுடன் அரோகரா என்று வீதிவலம் வந்த காட்சி எல்லாம் நினைத்துப்

பார்க்கிறேன்.

கண்ணில் இன்றும் நிறைந்து நிற்கும் சிவப்பு வெள்ளைச் சீலை அலங்காரத்துடன் உயர்ந்து நின்ற அந்த அழகிய தேர். அதனை வீதியைச் சுற்றி வடத்தினால் இழுத்து வந்ததையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன்.

அந்தக் கோவிலில் வளர்ந்த வளர்த்த சைவமும் தமிழும் நமது சமூக அமைப்பும் கலாச்சாரமும் பற்றும் பாசமும் எமது மண்ணின் வரலாற்றில் தனி இடம் பிடிக்கும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் பொறுமையும் புரிந்துணர்வும் மூத்தோரை மதித்து பணிவன்புடன் வாழ்ந்த ஒரு வாழ்க்கை முறை நம் சகோதரர்களிடம் வளர வேண்டும் என்பது எனது விருப்பம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உலகுக்கு எடுத்துக்காட்டாக நம் மண்ணின் மைந்தர்கள் வாழ வேண்டும். நமக்கெல்லாம் மேலும் மேலும் பெருமை தேடித்தர வேண்டும். பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் நம் சகோதரர்களுக்கு எங்கிருந்தாலும் அருள் புரிய வேண்டுகிறேன்.

தம்பி மனோரஞ்சிதன் தனது வாழ்க்கைச் சுமையுடன் இவ்வரிய பணியையும் மேற்கொண்டிருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் அவருக்கு துணையாக இருக்க வேண்டும். அவருடைய பணிக்கு நாம் கடமைப்பட்டவர்கள்.

*யாதும் ஊரே யாவரும் கேளிர்*

*24, Fernlea Road, Mitcham, Surrey, CR4 2HE, UK*
*Tel.: 0208 687 1154*

# நன்றி பகர்கின்றோம்

புலம்பெயர் வாழ்வில் எத்தனையோ இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்கள் எங்கள் கிராமத்து தச்சை விநாயகரின் அருளினைப் பெறும் பொருட்டு பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் 1996ம் ஆண்டு தொடக்கம் தச்சை விநாயகரின் உற்சவ தினத்தையொட்டி விசேஷ பூஜைகள் அபிஷேகங்கள் செய்வதற்கும் 2000ம் ஆண்டு தொடக்கம் சங்காபிஷேகம் (108 சங்குகள்) சகஸ்ரநாமம் (1008 விநாயகர் நாமம் உச்சரித்து அர்ச்சனை செய்தல்) திருப்பொன்னூஞ்சல் போன்ற கிரியைகள் செய்வதற்கும் ஒழுங்கு செய்து தந்த ஆலய நிர்வாகத்திர்க்கும், மதகுருமார்கள், தொண்டர்கள், மற்றும் நடைபெறுகின்ற கிரியைகளில் பங்குபற்றி விநாயகரின் அருளினைப் பெறுவதோடு விழாவினைச் சிறப்பித்த அன்பர்கள் அடியார்கள் அனைவர்க்கும் கரவை நண்பர்கள் சார்பில் மீண்டும் மீண்டும் நன்றிகள் பல உரித்தாகட்டும்.

மற்றும் எங்கள் வேண்டுதலின் பேரில் சிரமமம் பாராது மிகக்குறுகிய காலத்தில் திருவூஞ்சல் பாமாலை - 2001 வெளிவருவதற்கு ஒத்தாசை புரிந்த, எங்கள் மண்ணின் மைந்தர்களான கரவை சைவப்புலவர் திரு ஐ. விநாயக மூர்த்தி (பாமாலை ஆக்கம்) அவர்களிற்கும், ஆலய வரலாற்றை சிறப்பாகத்தொகுத்தனுப்பிய அண்மையில் தமிழகத்தில் வி.க விருது பெற்ற பேராசிரியர் திரு கா. சிவத்தம்பி அவர்களிற்கும், மறைந்த கரவை மண்ணின் மைந்தர்களை ஏன் கௌரவிக்க வேண்டும் என்றும் அவர்கள் வரலாற்றினை மிகவும் சுருக்கமான முறையில் தொகுத்து வழங்கிய திரு கீழ் கரவை பொன்னையன் (வியுகன்) அவர்களிற்கும் சென்ற வருடம் வெளியான எங்கள் மலரினைப் பார்வையிட்டு வாழ்த்துச்செய்தி அனுப்பிய கரவைக் கோவை ஆசிரியர் கவிவேந்தன் திரு சி. வேலாயுதம் (ஜெர்மனி) அவர்களிற்கும் வழக்கறிஞர் திரு செ. வீரவாகு (இங்கிலாந்து) அவர்களிற்கும் கரவை நண்பர்கள் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளனர்

மற்றும் மறைந்த எங்கள் கிராமத்து மைந்தர்களை 2001 ம் ஆண்டு நாட்காட்டியில் பதிப்பித்து கௌரவப்படுத்தியும் எங்கள் ஆக்கங்களை குறுகிய காலப்பகுதியில் சிறப்பாக வெளிவர வடிவமைத்து கொடுத்த கிருஷ்ணா அச்சகத்தினர்க்கும் கரவை நண்பர்கள் சார்பில் நன்றிகள் பல.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

**கரவை நண்பர்கள்**

பி.குறிப்பு : - கரவை நண்பர்கள் சார்பில் தொகுப்பிற்கான தொடர்புகள் அச்சுதன் (கவுந்திலான்)

விதை தரையில் ஊன்றப்பட்டு
மண்ணும், காற்றும், நீரும்,
அதனைச் சூழ அமைக்கப்படுகின்றன.
விதை
மண்ணாகவோ, காற்றாகவோ, நீராகவோ,
ஆகிவிடுகிறதா?
இல்லை.
அது செடியாகிறது.
தனக்குரிய வளர்ச்சி விதிக்கேற்ப
விருத்தியடைகிறது.
காற்றையும், மண்ணையும், நீரையும்,
தனதாக்கிக் கொண்டு தனக்கு வேண்டிய
சத்துப் பொருளாக மாற்றி, ஒரு செடியாய்
வளர்கிறது.

சமயத்தின் நிலையும் இதுவே.
கிறிஸ்துவர் இந்துவாகவோ, பௌத்தராகவோ
மாற வேண்டியதில்லை அல்லது
இந்து பௌத்தராகவோ, கிறிஸ்துவராகவோ
மாற வேண்டியதில்லை.
ஆனால் ஒவ்வொருவரும் மற்ற சமயங்களில்
நல்ல அம்சங்களைத் தமதாக ஆக்கிக்கொண்டு
தம் தனித்தன்மையை பாதுகாத்துக் கொண்டு
தம் வளர்ச்சி விதியின் படி வளர வேண்டும்.

**- சுவாமி விவேகானந்தர்**